# திருச்சிராப்பள்ளித் தாயுமானவன் மாலை

பதிப்பு

நா. இந்திரா தேவி

# திருச்சிராப்பள்ளித் தாயுமானவன் மாலை

'சுவடியியல் மற்றும் பதிப்பியல்' - பட்டயப் பேற்றிற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பு

நா. இந்திரா தேவி

நெறியாளர்

முனைவர் ய. மணிகண்டன்

தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை - 600 005

ஆகஸ்டு 2005.

சுவடியியல் மற்றும் பதிப்பியல்
பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேட்டு எண் : 5017

அப்பாவின் நினைவுக்கு . . .

# பதிப்பாளர் உறுதிமொழி

நா. இந்திரா தேவி,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'சுவடியியல் மற்றும் பதிப்பியல்' எனும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் 'திருச்சிராப்பள்ளித் தாயுமானவன் மாலை' எனும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

நாள் : 21.10.05

இடம் : சென்னை - 5.

பதிப்புமாணவர்
நா. [signature]
(நா. இந்திராதேவி)

# நெறியாளர் சான்றிதழ்

முனைவர் ய. மணிகண்டன்,
விரிவுரையாளர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'திருச்சிராப்பள்ளித் தாயுமானவன் மாலை' எனும் தலைப்பிலான தாள்சுவடியைச் 'சுவடியியல் மற்றும் பதிப்பியல்' எனும் பட்டயம் பெறுவதற்காக நா. இந்திரா தேவி அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப்பு இவர் தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நாள் : நெறியாளர்

இடம் : சென்னை - 5. (ய. மணிகண்டன்)

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நன்றியுரை | 1 |
| 2. | பதிப்புரை | 3 |
| 3. | முன்னுரை | 8 |
| 4. | திருச்சிராப்பள்ளித் தாயுமானவன் மாலை | 15 |
| 5. | செய்யுள் முதற்குறிப்பு அகராதி | 38 |
| 6. | சொல்லடைவு | 41 |
| 7. | துணைநூற்பட்டியல் | 71 |

# நன்றியுரை

*ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்*
*கருதி இடத்தாற் செயின்.*

குறள் ***484***

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழிலக்கியத் துறையில் முதுகலை பயில வாய்ப்பளித்துச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் என்னும் பட்டய படிப்பிற்கு என்னைத் தேர்வுசெய்த தமிழிலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் வீ. அரசு அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக "திருச்சிராப்பள்ளித் தாயுமானவன் மாலை" எனும் தாள் சுவடியைப் பதிப்பிக்க அனுமதி அளித்து நெறிப்படுத்திய எனது நெறியாளர் பேராசிரியர் ய. மணிகண்டன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உரிய காலத்தில் சுவடியை பதிப்பிப்பதற்கு அனுமதி அளித்த சென்னை அரசினர் கீழ்த்திசை சுவடி நூலகக் காப்பாளர் முனைவர் சு. சௌந்தரபாண்டியன் அய்யா

அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பிற்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தியதோடு, சுவடியில் உள்ள ஐயங்களைக் களைந்து பெரிதும் உதவிகள் புரிந்த புலவர் ப. வெ. நாகராசன் அய்யா அவர்களுக்கும், முனைவர் கி. ஜெயகுமார், முனைவர் சு. நிர்மலாதேவி, பேராசிரியர் சீனிவாசன் ஆகியோர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் வழிப்படுத்தி என்னை வாழ்வில் உயர்த்திக் கொண்டிருக்கும் அன்பிற்குரிய என் அன்னைக்கும் தந்தைக்கும், முதுகலைப் பயில ஊக்கமளித்துப் பல்வேறு சூழலில் உதவிகள் புரிந்த என்னுடைய அப்பாவின் நண்பர் திரு. குப்தா அவர்களுக்கும் மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் என் நன்றி என்றும் உரித்து.

பதிப்புப் பணியில் உதவிகள் புரிந்த அனைத்து நண்பர்களுக்கும் கணிப்பொறி மூலம் நல்ல முறையில் இந்நூலை அச்சிட்டு கொடுத்த பதிப்பகத்தாருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றியுடன்,

(நா. இந்திரா தேவி)

# பதிப்புரை

## சுவடி பற்றிய செய்திகள்

"திருச்சிராப்பள்ளித் தாயுமானவன் மாலை" எனும் சுவடி, சுவடி எண் - ஆர். 8566 சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூல் நிலையத்தில் உள்ளது. இது தாள் சுவடி. சுவடி நல்ல முறையில் முழுமையாக உள்ளது. இந்நூல் அதன் ஆசிரியரான திரு. நா. கனகராச ஐயர் எழுதிய சிற்றிலக்கிய நூல்களின் தொகுதியாக விளங்கும் புத்தகத்தில் 185ஆம் பக்கம் முதல் 197ஆம் பக்கம் வரை 13 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலின் இறுதி யிலும் பாடல் எண் கொடுக்கப்பட்டுள்ளது. சுவடியின் இறுதியில் 5.3.1970 அன்று பூர்த்தி செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## நூல் அமைப்பு

மாலை இலக்கியம் 30, 50, 70, 100 என்ற எண்ணிக்கையில் பாடப்பெறும் எனும் முறைப்படி, இந்நூல்

காப்புச் செய்யுள் நீங்கலாக வாழ்த்துச் செய்யுளுடன் சேர்த்து 51 பாடல்களுடன் விளங்குகின்றது. இதனுள் இறைவனின் பெருமைகள், இறைவன் தாயுருகொண்டு மகப்பேறு பார்த்தமை, புராண செய்திகள், இறைவனை ஆசிரியர் வேண்டுவன ஆகியவை பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலின் ஈற்றுத் தொடரும், 'தாயுமானவனே' என்று மகுடம் வைத்துப் பாடப்பட்டுள்ளது. ஈற்றுத் தொடரிலுள்ள தாயுமானவன் என்ற சொல்லுடன் இறைவன் கோயில் கொண்டுள்ள இடமான திருச்சிராப்பள்ளி என்ற ஊரையும், இலக்கிய வகையான மாலை என்ற சொல்லையும் சேர்த்துத் 'திருச்சிராப்பள்ளித் தாயுமானவன் மாலை', என்று ஆசிரியர் இந்நூலுக்குப் பெயரிட்டுள்ளார். பெரும்பாலும் இறைப்பெயர் சார்த்தியும் இடப்பெயர் சார்த்தியும் வழங்கும் திருத்தணிகை ஐங்கர மாலை, சீரங்க நாயக மாலை முதலிய நூல்களைப் போன்று இந்நூலும் அமைந்துள்ளது.

யாப்பு

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆனது. எதுகை, மோனை நயத்துடன் யாப்பமைதியும் இந்நூலுள் சிறப்பாக உள்ளது.

## மொழி நடை

மக்கள் விரும்பிப் படிக்கும் வண்ணம் எளிய முறையில் அமைந்துள்ளது.

## நூலாசிரியர் குறிப்பு

'திருச்சிராப்பள்ளித் தாயுமானவன் மாலை' என்ற இந்நூலின் ஆசிரியர் நா. கனகராச ஐயர் ஆவார். இவர் கவிராச பண்டிதர் என்ற பட்டம் பெற்றவர். வித்துவான், எம்.ஏ. முதலிய பட்டங்களைப் பெற்று புதுக்கோட்டை, குடந்தைக் கல்லூரிகளில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். இவர் திரு. நாராயண ஐயங்கார், உ. வே. சா. இருவரிடமும் தமிழ் கற்றவர். தமிழ், வட மொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் புலமை யுடைவர். இவர் இயற்றிய செய்யுள்கள் இலட்சத்திற்கும் மேற்பட்டவை. இவர் சிற்றிலக்கியங்களையே மிகுதியாக எழுதியிருப்பினும் வரலாற்று நூல்களையும் எழுதியுள்ளார். ஆசிரியர் பல ஊர்களுக்குச் சென்று அங்குள்ள கோயில்களை நேரே தரிசித்துப் பாடுவதை வழக்கமாகக் கொள்பவர். இந்நூலையும் அவ்வாறே திருச்சிராப்பள்ளியில் தங்கியிருந்து பாடினார் என்பதை இந்நூலில்,

*திரிசிர புரத்தே சிலபகல் ஒதுங்கும்*
*திருவினைப் பெறுதலால் அறிந்தேன்.*

*பாடல் - **22***

என்ற வரிகளில் அறிய முடிகிறது. இதனால் இந்நூலாசிரியர் தமிழ்ப் புலமையுடன் வரலாற்றறிவும் உடையவர் என்பதையும் அறியலாம். இவர் இயற்றியவற்றுள் குறிப்பிடத்தக்கவை,

பிள்ளைத் தமிழ்

பெரிய நாயகி பிள்ளைத்தமிழ், கம்பன் பிள்ளைத்தமிழ், திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ்

அந்தாதி

புவனேஸ்வரி அந்தாதி, காசி முதல் ராமேஸ்வரம் வரையுள்ள இறைவி மேல்பாடிய 20 அந்தாதிகள்.

பரணி

இலங்கை பரணி முதலியன

செய்யுள் நாடகம் – மறைந்த மாநகர், சிவாஜி விஜயம்.

பல்வேறு உலா நூல்கள், ஸ்கந்தகிரி முருகன் மீ இருபதுக்கும் மேற்பட்ட பிரபந்தங்கள் பாடியுள்ளார்.

இவர் இயற்றிய அனுமத் புராணம் 6,000 பாக்கள உடையது.

‘உபநிடதம்’ முழுவதையும் ஜனமித்திரன் இதழில் ஆசிரியப்பாவில் எழுதி வெளியிட்டுள்ளார்.

‘தம்ம பதத்’தைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.’

வரலாற்று நூல்கள் – தமிழ்ப்புலவர் வரலாறு, பாண்டிய மன்னர் வரலாறு முதலியன.

# முன்னுரை

தமிழ் மொழியின் பழமையான இலக்கியங்கள் சுவடிகளில் எழுதப்பட்டுள்ளன. இத்தகைய சுவடிகள் வீடுகளிலும், கோயில்களிலும், சுவடி நூலகங்களிலும், மடங்களிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இச்சுவடிகள் அனைத்தையும் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டுமெனில் அவற்றை அச்சில் கொண்டு வருதல் என்பது மிகவும் அவசியமான ஒன்று.

இதைக் கருத்தில் கொண்டு சென்னைப் பல்கலைக்கழகம் ஆண்டு தோறும் 'சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய' வகுப்பைத் தொடர்ந்து நடத்திவருகிறது. 2004 – 2005ஆம் ஆண்டு இதற்காக நடத்தப்பட்ட பட்டய வகுப்பில் பதிப்பிப்பதற்காகச் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடியியல் நூலகத்தில் உள்ள "திருச்சிராப்பள்ளித் தாயுமானவன் மாலை" எனும் தாள் சுவடி பதிப்பித்து அளிக்கப்படுகிறது.

மாலை – பொருள்

மாலை என்ற சொல் தொடுக்கப்பட்டது, தொடுத்த பூந்தொடை, மாதரணி வடம், பிரபந்த வகை, வரிசை, பாசம், விறலி, பெண் போன்ற பல் பொருள்களைக் கொண்டு விளங்குகின்றது. இங்கு மாலை என்ற சொல் 'பிரபந்த வகை'யைக் குறிக்கும்.

'மாலை' எனும் பிரபந்த வகை, 19ஆம் நூற்றாண்டில் தோன்றியது. ஒரு பொருளைக் குறித்து ஒரே யாப்பில் 30, 50, 70, 100 என்ற எண்ணிக்கையில் பாடப்பெறுவது மாலையாகும். இவ்வகை இலக்கியங்களின் பாடல்கள் அனைத்தும் ஈற்றில் ஒரே சொல்லைக் கொண்டு முடிவதும் (மகுடம்), அச்சொல்லால் நூலின் பெயர் அமைவதும் பெரும்பான்மையான பொதுத்தன்மையாகும். எடுத்துக் காட்டாகத் தண்டபானி சுவாமிகள் இயற்றிய 'சீரங்கநாயக மாலை', கவிராசன் கந்தன் என்பவர் இயற்றிய 'திருத்தணிகை ஐங்கர மாலை' ஆகியவற்றைக் கொள்ளலாம். இவ்வாறு ஈற்றில் ஒரே சொல்லைக் கொண்டு முடியாமலும் பல மாலை நூல்கள் உள்ளன. எடுத்துக்காட்டாகப் பிச்சை இப்ராஹிம் புலவர் இயற்றிய 'திருமதீனத்து மாலை' என்பது காணப்படுகிறது.

பாட்டியல் நூல்கள் பொருள், யாப்பு, எண்ணிக்கை போன்ற பல்வகை அடிப்படையில் அமைந்த மாலை பலவற்றைத் தருகின்றன.

பாட்டியல் கூறும் இப்பல்வகை போன்றே தமிழ் இலக்கியங்களை நோக்கும்போது பல மாலைகள் இருப்பதைக் காண முடிகிறது. பல்வகை பிரபந்தங்களின் தோற்றுவாயாக இருந்த பக்தி இலக்கிய காலத்தில் இவ்வகை இலக்கிய வகையைக் காணலாம். எடுத்துக்காட்டாகத் திருமூலரின் திருமந்திர மாலை, அப்பரின் அங்க மாலை, காரைக்கால் அம்மையாரின் திருவிரட்டை மணிமாலை எனப் பல மாலைகள் தோன்றி, பின்னர் அவை பல நிலைகளில் வளர்ச்சியடைந்தன.

அகராதி மாலை, அங்க மாலை, அந்தாதி மாலை, அனுராக மாலை, அக்ஷர மாலை, சிலேடை மாலை, சோடச மாலை, தண்டக மாலை, பல்சந்த மாலை, புகழ்ச்சி மாலை என 24 வகை மாலைகள் உள்ளன. இவை அனைத்திற்கும் பாட்டியல் நூல்கள் இலக்கணம் கூறுகின்றன.

## திருச்சிராப்பள்ளி – திருத்தல வரலாறு

தாயுமானவர் கோயில் திருச்சி நகரின் மையப் பகுதியில் மலைக்கோட்டையில் அமைந்துள்ளது. இக்கோயில் 273 அடி உயரமும் 417 படிகள் கொண்டும் விளங்குகிறது. இத்திருத்தலத்தின் மலையடிவாரத்தில் மாணிக்க விநாயகர் சந்நிதியும், மலையின் நடுவில் தாயுமானவர் சந்நிதியும், உச்சியில் உச்சிப் பிள்ளையார் சந்நிதியும் உள்ளன. இத்தலம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால்

ாடப்பெற்றுள்ளது. இத்தலத்திற்கு இரண்டு பதிகங்கள் உள்ளன. மூலவர் சுயம்பு மூர்த்தி.

சுவாமி – தாயுமானவர், தாயுமானேஸ்வரர், மாத்ருபூதேஸ்வரர்.

அம்பிகை – மட்டுவார் குழலி, சுகந்த குந்தளாம்பிகை.

தீர்த்தம் – காவிரி

திரிசிரன் எனும் அரக்கன் அரசு புரிந்து பூசித்த தலம். இதற்குத் தென்கயிலாயம் என்ற பெயரும் உண்டு. இத்தலத்தை பிரமன், இந்திரன், சடாயு, சப்த ரிஷிகள், சாரமா முனிவர், மௌனகுரு தாயுமான சுவாமிகள் ஆகியோர் வழிபட்டு பெரும்பேறு அடைந்தனர்.

ஒருமுறை வாயுவின் சீற்றத்தால் பெயர்ந்த கொடுமுடிகள் மூன்றனுள் ஒன்று இந்த மலையாகவும் மற்றவை திரிகோணமலை, திருக்காளத்தியாகவும் உருவாகியதாகக் கூறப்படுகிறது. இங்கு விநாயகர், முருகன், அறுபத்துமூன்று நாயன்மார்கள், நவகிரகங்கள், சண்டேசுவரர் ஆகியோருக்கு சந்நிதிகள் உள்ளன. சுவாமியும் அம்பிகையும் மேற்கு நோக்கிக் காட்சி அளிப்பது இத்தலத்தின் சிறப்பாகும்.

பங்குனி மாதம் 23, 25, 26 ஆகிய தேதிகளில் மாலையில் சூரியனின் கதிர்கள் இறைவன் மீது நேராக விழும்

காட்சியைக் காணலாம். இறைவனின் 64 மூர்த்தங்களுள் கங்காளர் திருமூர்த்தம் இங்கு உள்ளது.

## தாயுமானவர் – பெயர்க்காரணம்

சிவபெருமானை வழிபட்ட பெண் ஒருத்தியின் பிள்ளைப்பேறு காலத்தில் காவிரி நதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அவளுடைய தாய் அக்கரையிலிருந்து இக்கரைக்கு வரமுடியாததால் இறைவனே அவள் தாயாக உருக் கொண்டு வந்து மருத்துவம் பார்த்தார். ஆகவே இறைவனுக்குத் தாயுமானவர் எனப் பெயர் வந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

♦♦♦

# திருச்சிராப்பள்ளித் தாயுமானவன்
# மாலை

# திருச்சிராப்பள்ளித் தாயுமானவன் மாலை

## காப்பு

முக்குடுமி யுள்ள முதியமலை மேலிருக்கும்
முக்கணனைத் தாயான மூர்த்தியினை -
இக்கணமே
வாயில்வாழ் பிள்ளை மலையுச்சிப்
பிள்ளை துணை
வாயவே வாழ்த்துகவென் வாய்.

## பிரபந்தம்

1. திருச்சிராப் பள்ளித் திருமலை யுருவாய்த்
திகழுமெம் மிறைவனே சிவனே
உருச்சிராப் பள்ளி உச்சியி னளவும்
ஓங்கிய மகாலிங்க மயமே
அருச்சிராப் பள்ளி அகத்திலும் புறத்தும்
அன்பருக் கருளிய அமலா
தருச்சிராப் பள்ளி தரிசனம் தருவாய்
தயைமிகு தாயுமா னவனே.

(1)

2. சந்தமா மறையும் தமிழநன் மறையும்
தகுந்தவர் இசைக்கவே சுவைப்பாய்
அந்தமா யமைந்தாய் ஆதியாய் இருந்தாய்
அனைத்துமி ரகம்புற மமர்ந்தாய்
மந்தமா மதியர் மதித்துணர் வரிய
மறையுரு வுடையவெம் பிரானே
தந்தையே தாயே தமையனே தமக்கை
தங்கையே தாயுமா னவனே.

(2)

3. பக்தியிற் சிறந்த நால்வரின் உளத்தும்
பாதமே பதித்தருள் பரனே
சக்தியிற் சிறந்த மட்டுவார் குழலி
தனைக்கரம் பிடித்தருள் தலைவ
உத்தியிற் சிறந்த உபநிட தருத்தம்
உரைத்தவ மனத்துறை பவனே
முக்தியிற் பிரியா முழுமுத லலையோ
முதல் வனே தாயுமா னவனே.

(3)

4. வேண்டுவ திலாதாய் வெறுப்பதி லாதாய்
வித்தையே அவித்தையே அணுகாய்
யாண்டுள ரடியார் என்பதை யறிந்தே
எழுந்தருள் புரிந்திடு மிறைவா

காண்குநா மெனவே கண்களை மூடியவர்
    கண்டுணர் அகப்பொரு ளுருவே
தீண்டுதல் அரிய திரிசிர புரத்தாய்
    தேவனே தாயுமா னவனே.

(4)

திருச்சிராப் பள்ளி மலையின்மே லிருக்கும்
    தெய்வமே தெய்வநா யகனே
மருச்சிராப் பள்ளி மட்டுவார் குழலி
    மணந்தனள் தழுவி(டு) மறையோய்
உருச்சிராப் பள்ளி உவந்தனை அதனால்
    ஓங்கலாய் உயர்ந்தனை அலையோ
அரிச்சிராப் பள்ளி யரசனே அடியேம்
    அகத்துறை தாயுமா னவனே.

(5)

திரிசிரா மலைமேல் விளங்கிய சிவமே
    திருத்தொண்டர் மனத்தொளி மலையே
தரிசிரா யுளத்தார் கைதொழு மளவே
    காட்சிதந் தருள்பரம் பொருளே
அரிசிரா சனமே புரிந்தனன் வணங்கும்
    அண்ணலே அழிவிலா தவனே
எரிசிராம் பகமே மதிகதிர் விழியே
    ஏற்றனை தாயுமா னவனே.

(6)

7. ஆரண முழக்கம் அறாதமா நகராம்
அமுதமே நிகர்தமி ழிசையின்
பூரண வினிமை பொருந்திய செவியாய்
புங்கவர் பணிதிருப் பதத்தாய்
நாரணன் புரக்கும் பணியையே பயிலே
நான்முகன் படைப்பிலே அமரக்
காரணன் உளேனென் றிசைத்தனை
அலையோ
கருணைசால் தாயுமா னவனே.
(7)

8. காவிரி வடக்கே அரங்கமா நகரின்
கரையரு கானைக்காம் புறத்தே
பூவிரி பொழில்சூழ் மாளிகை யகத்தே
பொருள்மலி வணிகர்தம் குலத்தே
தூவிரி மகவாய்ப் பிறந்தவோர் மகளைத்
தொன்மைசால் திரிசிர புறத்தே
தேவிரி மனத்துச் செட்டிமார் குலத்தே
சேர்த்தனை தாயுமா னவனே.
(8)

9. மணமக ளெனவே வருமவள் மணாளன்
மனத்திலும் மனையிலும் சிறந்தான்
குணமாக ளெனவே மாமன்மாமி யரே
குறிக்கொள வளர்ந்தன ளவளே

வணமகள் அழகில் யிருமகள் தலைவன்
மனத்தினுக் கிகையவே நடந்து
கணமகள் எனவே கருவினைச் சுமந்தாள்
காதல தாயுமா னவனே.

(9)

10. பிறந்தகம் பொன்னி வடகரை யிருக்கப்
பிறங்குது புக்ககம் அவாசி
பிறங்கிய திருச்சிராப் பள்ளியி லமைந்து
பிஞ்ஞகன் அருளினால் வளர
அறங்கெழு மணாளன் தலைவிபால் அமைந்த
அருஞ்சிறப் பறிந்தனள் மகிழ்ந்தாள்
புறங்கிளர் வுறாத வுணர்ச்சியால் அவளும்
பொறுத்தனள் தாயுமா னவனே.

(10)

11. காவிரி பெருகிக் கரைபுரள் வதனால்
காதல்சால் மகளுக்கு மகப்பேறு
ஆவதன் குறிப்பை யறிந்ததாய் மெலவே
அமைந்தன மருந்துக ளுடனே
தேவர்தம் பெருமான் திருவடி நினைந்தே
திருமகள் இலத்தினை யடைய

மேலவே பெருக்கு வழிவிடா ததனால்
மெலிந்தனள் தாயுமா னவனே.

(11)

12. பூரண கருப்பம் பொருந்திய மகட்குப்
பொருத்தமாம் உதவிகள் புரிய
காரணன் அருளே நம்பிய திருத்தாய்
க்ாவிரி கடக்குமா றறியாள்
ஆரண முதலே யாதுயான் புரிவேன்
அருள்தியோ என்றிரந் தனளால்
தாரண முதல்வன் புரிந்தது புகல்வன்
சம்புவே தாயுமா னவனே.

(12)

13. தாயுமான வன்யான் என்பதை வணிகத்
தாயொடு குலமெலாம் அறிய
நாயமா நெறியாய் தாய்திரு வுருவே
நயந்தனை துணையொடு நடந்தாய்
நோயுமா யதற்கு மருந்துமா யுளதை
நுவலவும் கொடுக்கவும் அறிந்தாய்
வேயுமா கூரை வீட்டுளே புகுந்தாய்
விரைந்தனை தாயுமா னவனே.

(13)

14. ஆண்மையை மறைத்தாய் பெண்மையே
தரித்தாய்

அருமைய மருந்தொடு மடைந்தாய்
கேண்மையை விளக்கும் தாயெனப் புகுந்தாய்
கிரிசையும் துணையென நடந்தாய்
நாண்மையின் மிகுந்த வணிகமா மகளின்
நற்சிறு குழவியை அணைத்தாய்
கோண்மையி னுரிய செவ்வெண்ணெய்
கொடுத்தாய்
குணம்பொலி தாயுமா னவனே.

(14)

15. பிறந்தபே றழுகை கேட்டபெண் மகளும்
பெற்றதாய் இருப்பதாய் நினைந்தே
சிறந்ததன் மாமன் மாமியே கணவன்
சிந்தனை மகிழ்வுறும் செய்தி
அறந்தெளி தாயே யுணர்த்துவ தறிந்தாள்
அடிகுறு மதலையை அணைத்தாள்
திறந்தெளி தாய்மை விளக்கிய நினையே
தெரிந்திலள் தாயுமா னவனே.

(15)

16. மூன்றுநாள் பெருகி வழிவிடா திருந்த
முதிர்பெருக் குடையகா விரியும்
ஊன்றுபோர் மறவன் இடைவது போலவே
ஓங்கலும் வடகரை யிருந்து

தோன்றுதாய் மகளின் இலத்திலே புகுந்த
சொற்றனை கேட்டவம் மகளும்
சான்றுதான் எனலாம் பரமனை அறிந்தார்
சத்தியம் தாயுமா னவனே.

(16)

17. மகப்பெறு மகளும் பெற்றதாய் வரவால்
மகிழ்ந்தன ளென்றிறு மிறைவ
மிகப்பெரு நினது செயலினை யறிந்து
மெல்லிய உளமெலாம் உருகி
அகப்படு பொருளோ நடக்கவும் உரிதோ
அடிச்சியென் மனைய(க)ம் புகுந்தேக
மகப்பிற வியினை யெளிதரு ளியதை
மதிப்பருந் தாயுமா னவனே.

(17)

18. எவ்வணம் அறாப்பெண் எங்ஙனம்
நினைப்பாள்
எம்பிரான் மலைக்குமேல் விளக்கே
இவ்வணம் எளியேன் குடிலிலே பெரியாய்
எளியளென் எளியையாய்ப் புகுந்தாய்
மெய்வணம் மறைத்தே பெண்மையை
அணைத்த
வேடத்தைப் புகழவும் அறியேன்

உய்வணம் உனக்கே உரித்தென வுரைத்தே
உருகினன் தாயுமா னவனே.

(18)

9. தாயிஃ தறிந்தாள் தலைகரம் குவித்தாள்
தகுதிரிசிரா மலையையே வணங்கி
வாய்பெருந் துணையே மறைக்குமேல்
மறையே
மனத்தினைக் கடந்தெழு மொளியே
நாய்சிறி திஃதென் றெண்ணியா மெனது
நன்மகள் தனிநிலை கருதி
தாய்திரு வேடம் புனைந்தனை யிதுவும்
தகுவதே தாயுமா னவனே.

(19)

0. அம்மையே அப்பா அரசனே அமைச்சே
அறிவினுக் கறிவென அமைந்தாய்
செம்மையே உருவாச் சிறந்தனை
யதனால்
செம்மையே தெளிவுறப் பிடித்தாய்
இம்மையே மறுமை இரண்டிலும் அடியேம்
இலத்தினுக் குறுதுணை யிருந்தாய்
மெய்ம்மையே நினைப்பம் நினதருள் புகழ
விழைவரோ தாயுமா னவனே.

(20)

21. தாய்புகல் மொழியை அறிந்தனர் மகளின்
தகைதெளி மாமிமா மனுமே
வாய்மனம் கடந்த பரம்பொருள் தமது
வல்விகம் விளக்கவோர் மகவை
தோய்மன முடைய பெண்ணினுக் கிரங்கித்
துணையெனப் புகுந்தளித் ததனை
யாய்புகழ் வறியாள் யான்புகழ் வறியேன்
என்றனர் தாயுமா னவனே.

(21)

22. திரிசிர புரத்துப் புராணத்தில டங்கும்
சிவமய சரிதையுள் இதனை
திரிசிர புரத்தே சிலபகல் ஒதுங்கும்
திருவினை(ப்) பெறுதலால் அறிந்தேன்
திரிசிர புரத்துச் சிவனையே நிகர்க்கும்
தெய்வம்வே றுலகினி லுளதோ
திரிசிர புரத்துச் சிவபுர முள்தே
சிவமுளாய் தாயுமா னவனே.

(22)

23. அருளிலே சிறந்தாய் அறிவிலே உயர்ந்தாய்
ஆற்றலால் அளப்பரும் பெரும
பொருளிலே சிறந்த அகப்பொருள்
விரித்தாய்
புறப்பொருள் திரிபுரர் அறிவார்

அருளினால் விளக்க அமைந்தனை சிரித்தாய்
அவர்கருத் தறிந்திலர் அழிந்தார்
இருளிலே யுழன்றெம் எள்ளினும் நினையார்
இகப்பிலேம் தாயுமா னவனே.

(23)

ஆண்டவன் எனவே அடியவர் கணமே
அழைப்பதை அவாவிய அரசே
ஆண்டகை யெனவே அயலவர் அறிய
அரும்பெருஞ் செயல்பல புரிந்தாய்
காண்டகு குணத்தாய் என்பதை விளக்கக்
கருணையே கடலென அமைந்தாய்
பூண்டவன் அடியார் இனம்விரும் புவதே
புராந்தக தாயுமா னவனே.

(24)

ஒளியவர்க் கொளியை உதவுதி பரமா
உதவியை வேண்டியே யிரக்கும்
அளியவர்க் களியால் அருள்மொழி மொழிதி
அறிவினாற் சிறந்தவர் தமக்கோ
தெளிவுறற் குரிய பொருள்களை விளக்கித்
தெளிவையே செல்வமாய் அருள்தி
வளியுளர் உச்சிப் பிள்ளையை யுடைய
வள்ளலே தாயுமா னவனே.

(25)

26. முடியொரு மூன்று திரிசிரா மலையில்
முளைத்தன ஒன்றுநின் முடியே
அடியவர் பணியும் மட்டுவார் குழலி
ஆலயம் ஒருமுடி அருகே
நெடிதுயர் முடியே உச்சிமேற் பிள்ளை
நேயமே விளக்கிய முடியாம்
படியிலே மும்மை ஒருமையா மெனவே
பகர்தியோ தாயுமா னவனே.

(26)

27. நிலத்தக விழுந்து நினதுகோ யிலையே
நேருற நோக்கியே வருவார்
அலத்தக மணிந்த அரிவைமா ரெனினும்
ஆடவர் ஆயினும் அவர்தாம்
வலத்தகம் வளைந்து நினதுபே ருருவை
வணங்கவோர் வழிவகுத் தனையே
குலத்தகம் வருவோர் திருமதில் வளைந்தே
கும்பிடும் தாயுமா னவனே.

(27)

28. பெருமையிற் பெரிய பேருருவு டையாய்
பெருமலை முடியின்மேல் இருந்தாய்
அருமையிற் சிறந்தாய் ஆயினு நினையே
அனுதினம் அணுகுவார் பலரே

கருமையிற் பெரியான் வெண்மையிற்
பெரியான்
கைதொழும் செம்மையிற் பெரியாய்
தருமநிற் குரிதே தயையுநிற் கியல்பே
தாங்குதி தாயுமா னவனே.
(*28*)

*29.* உள்ளதோர் பொருளே பிறபொரு ளெனவே
உரைப்பன தோற்றமே யெனவே
விள்ளவே பிறந்தாய் காலடி யகரம்
விளக்கினை ஒருமையுண்மை யினை
வள்ளவே இறைவி துதியினை வியந்து
மட்டுவார் குழலியின் விமானம்
கொள்ளவே பொதித்த கருத்தெனை
யுரையாய்
குருபர தாயுமா னவனே.
(*29*)

*30.* சுவைமிகு தமிழால் இயன்றதோர் பவந்தம்
சுயம்புவே நினக்குரிய தெனா
நவைமிலா வுளத்தார் நலமுற வுணர்வாள்
நடந்துறு நெறியின் திடப்பால்
சிவைதிரு வருளும் செறிந்ததென் றுரைக்கச்
சிலையெழுத் தினிளமைத் தனையே

குவைகுவை யெனவே கவிதைகள் குவிந்தாற்
கோடியோ தாயுமா னவனே.

(*30*)

*31.* பழமையிற் சிறந்த படிமங்கள் பலவும்
படியிலே யிருப்பதை விளக்கும்
கிழமையைப் புகலும் திறமெமக் கிலையே
கிரிசனே கிரிசையின் தலைவ
வழவழப் புறவே படிகளைப் பொருத்தி
வருகிற வடியரை விளிப்பாய்
அழகினைத் தெளிந்த அழகின துருவே
அண்ணலே தாயுமா னவனே.

(*31*)

*32.* நின்பெயர் பொருந்து குழவிகள் பலவே
நிலத்திலே பிறந்தன வளர்ந்த
தன்பெயர் நினக்கு முளதென மகிழ்ந்த
தாயுமா னவரைநீ மதித்தாய்
மன்பெயர் விளக்க வாழ்ந்தவப் பெரியோர்
மறைப்பொருள் விள்க்கினர் தமிழால்
என்பெயர் அளித்தேன் அவர்க்கென
இசைத்தாய்
எம்மிறை தாயுமா னவனே.

(*32*)

33. சரிந்தன விழுந்த சராசரங் களையும்
தாங்கினை நிறுத்திய தலைவ
விரிந்தன வுலக மனைத்தையும் ஒருகை
விரலினா லாண்டருள் பெரும
கரிந்தன அழிந்த திரிபுரங் களையே
கதைகளால் உணரவே புரிந்தாய்
தெரிந்தன அடியார் தெரிவுறத் தெரிக்கும்
தெய்வமே தாயுமா னவனே.

(33)

34. காவிரி கொடுக்கும் புனலினா லலது
கழுவுறப் பெறாதபே ருருவாய்
நாவிரி பனுவல் புலவரே மிசைப்பின்
நன்றென வேற்றநா யகனே
பூவிரி பொழிலே புறத்திலே விளங்கிய
பொருந்திய திரிசிரா மலையாய்
தேவிரி நிலையைத் தெளித்தருள் இறையே
சிராப்பள்ளித் தாயுமா னவனே.

(34)

35. மட்டுவார் குழலி மனத்திலே மறைந்தாய்
வானமே மறையவே வளர்ந்தாய்
கிட்டுவார் உளத்தே கிளர்ச்சியை வளர்த்துக்
கேவல நலத்தையு மளித்தாய்

பட்டுதூள் படுத்திப் பரிபட்டம் புனையப்
பட்டர்கள் படியிலே றுவதை
ஒட்டுவாய் உவந்து சிரத்திலே திருநீறு
ஒட்டிய தாயுமா னவனே.
(35)

36. அப்பனே நினது பெருந்திரு மேனி
அமுதத்தால் அமைந்ததோ அறியேம்
அப்பரே புகழ்ந்து மனமுரு கினரே
ஆளுடைப் பிள்ளையும் புகழ்ந்தார்
ஒப்பனை பதிந்த சுந்தரர் புகழ்ந்தார்
உனதருள் உலகுக்கே யுதிர்த்தார்
வைப்பினை அவர்க்கு வகுத்தது போலவே
வழங்குக தாயுமா னவனே.
(36)

37. தாயுமான வர்க்குச் சைவநன் னெறியிற்
றத்துவம் விளக்கிய மவுனி
தோயுமா மனத்தா னினதருள் விளக்கம்
சொற்றருள் திருமடம் நினது
கோயிலாம் நெறியே நூறுகால் பொருந்து
குறைவறு மண்டபத் தெதிரே
வாயுமா றமைந்த திருவருட் சிறப்பை
வழுத்துவெம் தாயுமா னவனே.
(37)

38. முகவைமா நகருக் கருகிலே நினாது
முழுப்பெயர் பொறுத்தமா முனிவர்
அகவைகள் நிரம்பி யடங்குமுன் பிறரால்
அளப்புகுந் தடங்கிய நிலத்தை
மிகவுமே மதித்துத் தமிழ்தெளி யரசர்
விதிமுறை சமாதிசெய் தனரே
தகவைநீ யறிந்த காரண மலவோ
சாமியே தாயுமா னவனே.

(38)

39. சாமியம் உரைக்க எவருமே யிலாத
தத்துவ சத்துவ மயமே
காமிய கருமம் புரிவதே துணிந்த
கருமிகள் மனத்திலே புகுந்து
வாமியின் அருளை வழங்குவித் தவரை
வயிந்துநிட் காமியத் தமைப்பாய்
யாமியல் நெறியும் எமக்கறி வுறுத்தும்
இறைவனே தாயுமா னவனே.

(39)

40. வருமமே யிருந்து பகையையே வளர்த்து
வாழ்பவர் வாழ்வினைச் சிதைத்து
கருமமே மலைபோல் வளர்த்த மானிடரும்
கருமயோ கிகளெனத் திரியத்

தருமமே விளக்கி அவர்தமை யுலகர்
சான்றமா முனிவரர் மதிக்க
கருமமே புரிந்தாய் கருமமே பொருந்தாக்
கடவுளே தாயுமா னவனே.

(40)

41. மோனமே யருள்வாய் முழுப்பொருள் விளக்கி
முக்தியி னெறியிலே யிசைப்பாய்
ஞானமே யுருவாய் நயந்தநா யகனே
ஞானவா ரிதியிலே யமிழ்த்தி
யானமே மதியா தெங்குமே திரியும்
இயற்கையை யளித்தியா லிறையே
தானமே தவமே தாங்கினை தரணி
தழைப்புறத் தாயுமா னவனே.

(41)

42. தகுதியே பொருந்தாச் சிறியரே யெனினும்
சம்புசங் கரசதா சிவமே
புகுதியே யெமக்கும் தருதல்நின் பொறுப்பாம்
புராரியே நினதுல கினிலே
மிகுதியே விரும்பும் மேதகவு டையோர்
வேண்டுவ விரைவுற அருள்வாய்
பகுதியே விகுதி யிடைநிலை யறிவேம்
பார்த்தருள் தாயுமா னவனே.

(42)

43. வணங்கியே நினையே வாழ்த்தியே வழுத்தும்
மனமுள வெளியவர் நிலைமை
இணங்கியே எளியார் இதயத்தை யுணரும்
இறைவநீ யறிகிலா ததுவோ
அணங்கினை யொருவாத் துணையென
வுடைய
அரசனே ஆண்டியே அருளாய்
உணங்குவே மெனவே யுரைக்குமுன்
யெளியார்க்கு
உதவுதி தாயுமா னவனே.
(43)

44. தாய்மையின் சிறப்பை நன்கறி பெரும
தந்தையே வென்னயாம் அழைத்தேம்
வாய்மையே மொழிவேம் கதிபிறி திலாதேம்
வருகுவேன் நின்திரு முனமே
நோய்மையே யொழித்து நோன்மைநன்
கருளி
நோன்புகள் புரியவே அமைப்பாய்
சேய்மையே இலைநீ அணியருள் அணியாய்
சிவமய தாயுமா னவனே.
(44)

45. என்றுமே நினையே நினைந்திலா தவரும்
இதயமே தூய்திலா தவரும்

ஒன்றுமே யறியார் விலங்குபோல் உழலும்
உணர்விலா மனிதரும் பிறரும்
கன்றுதான் பசுவைக் கடுகுதல் பொரவே
கருணையே வேண்டினர் வருவர்
பொன்றுமா றவரை விடுதியோ இறைவ
போற்றுதி தாயுமா னவனே.

(45)

46. ஐயகோ வறுமைப் பிணியினால் வருந்தி
அரைப்பசி முழுப்பசி அடைந்தோம்
மெய்யனே நினையே தாயென நினைந்து
வேண்டினேம் பசிப்பிணி மருந்தே
வெய்யராம் புலைமைக் குணத்தினார்
எமையும்
வெறுத்தனர் இழித்தொதுக் கினரே
கையரே இலேம்யாம் காத்தல்நின் கடமை
கடவுளே தாயுமா னவனே.

(46)

47. வேண்டுவார் வேண்டும் விருப்பெலாம்
நிறைக்கும்
வியத்தகு கருணையங் கடலே
ஆண்டுளார் அரச பதவியை இழந்தே
அவலத்தில் மூழ்குவ தறிவாய்
கீண்குநாம் அவர்தம் கரியநாய் இருளிற்

கவ்விய காலராய் இரக்கப்
பூண்டுளார் வேடம் புதுமையின் போக்கோ
புகலுதி தாயுமா னவனே.

(47)

48. ஐயமேந்து வதற்கு அவாவுள மனத்தார்
அவனியி லிலாதநன் னிலைமை
வையமே புகழும் வள்ளுவர் உலகில்
வந்தநாள் இலைஇன்று மிலையே
பொய்யரேம் இலேம்யாம் புலவராய் இருந்து
பொய்புகன் றிரக்கவே விழையேம்
மெய்யரா யிருந்து நின்னையே புகழ்வேம்
விதித்தருள் தாயுமா னவனே.

(48)

49. யாண்டையர் காரி ஓரியே பாரி
எழினியே நள்ளியே முதலோர்
மாண்டன ரெனினும் அவர்புகழ் மறையா
வாழ்வினைத் தமிழ்மொழி புகலும்
பாண்டவர் வனத்தே வாழ்கையில் உணவு
படைத்தனர் முனிவரா யிரர்க்கே
ஈண்டவர் மரபு இலாது போயினதே
என்செய தாயுமா னவனே.

(49)

**50.** ஈகையில் மனமே எழுவதா மெனினும்

எள்ளள வாழ்வுறும் இலேனே

வாகையில் அடைந்த கனகமோ மணியோ

வழங்கவே வழியிலை இறைவ

ஓகையில் வளரும் உளத்தினே னுனையே

உருகியே பாடுதல் துணிந்தேன்

சாகையில் அடைந்து மீண்டுறா வரமே

தந்தருள் தாயுமா னவனே.

(50)

♦♦♦

# வாழ்த்து

மறைபுகழ் சிறப்பார் திருச்சிராப் பள்ளி
மலைவளர் திருத்தளி வாழ்க
இறைமையே சிறந்த மட்டுவார் குழலி
எம்மனை மலைமுடி வாழ்க
முறைமையே செலுத்து முச்சிமேற் பிள்ளை
முகவயிற் பிள்ளையும் வாழ்க
நிறைவருள் தாயு மானவெம் பெருமான்
நிலமெலாம் வழுத்தவா ழியவே.

♦♦♦

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| | |
|---|---|
| அப்பனே | 36 |
| அம்மையே | 20 |
| அருளிலே | 23 |
| ஆண்மையை | 14 |
| ஆண்டவன் | 24 |
| ஆரணமுழக்கம் | 7 |
| ஈகையில் | 50 |
| உள்ளதோர் | 29 |
| எவ்வணம் | 18 |
| என்றுமே | 45 |
| ஐயகோ | 46 |
| ஐயமேந்துவதற்கு | 48 |
| ஒளியவர் | 25 |
| காவிரி கொடுக்கும் | 34 |
| காவிரி பெருகி | 11 |
| காவிரி வடக்கே | 8 |

| | |
|---|---|
| சந்தமாமறையும் | 2 |
| சரிந்தன | 33 |
| சாமியம் | 39 |
| சுவைமிகு | 30 |
| தகுதியே | 42 |
| தாய்புகல் | 21 |
| தாய்மையின் | 44 |
| தாயிஃதறிந்தாள் | 19 |
| தாயுமானவர்க்கு | 37 |
| தாயுமானவன் | 13 |
| திரிசிரபுரத்து | 22 |
| திருச்சிராப்பள்ளி திருமலை | 1 |
| திருச்சிராப்பள்ளி மலையின் | 5 |
| திரிசிராமலைமேல் | 6 |
| நிலத்தக | 27 |
| நின்பெயர் | 32 |
| பக்தியிற்சிறந்த | 3 |
| பழமையின் | 31 |
| பிறந்தகம் | 10 |
| பிறந்தபேறழுகை | 15 |
| பூரணகருப்பம் | 12 |
| பெருமையிற் | 28 |
| மகப்பெறு | 17 |

| | |
|---|---|
| மட்டுவார் | 35 |
| மணமகளெனவே | 9 |
| மறைபுகழ் | வாழ்த்து |
| முக்குடுமி | காப்பு |
| முகவைமா | 38 |
| முடியொரு | 26 |
| மூன்று நாள் | 16 |
| மோனமே | 41 |
| யாண்டையர் | 49 |
| வணங்கியே | 43 |
| வருமமே | 40 |
| வேண்டுவதிலாதாய் | 4 |
| வேண்டுவார் | 47 |


♦♦♦

# சொல்லடைவு

## (எண் பாடல் - அடி)


அகத்திலும் 1 : 3
அகத்துறை 5 : 4
அகத்தே 8 : 2
அகப்படு 17 : 3
அகப்பொருள் 4 : 3, 23 : 2
அகம்புறம் 2 : 2
அகரம் 29 : 2
அகவைகள் 38 : 2
அடங்கிய 38 : 2
அடங்கும் 22 : 1
அடங்குமுன் 38 : 2
அடிகுறு 15 : 3
அடிச்சியென் 17 : 3
அடியவர் 24 : 1, 26 : 2
அடியார் 4 : 2, 24 : 4, 33 : 4
அடியரை 31 : 3
அடியேம் 5 : 4, 20 : 3
அடைந்த 50 : 2
அடைந்தாய் 14 : 1
அடைந்து 50 : 4
அடைந்தோம் 46 : 1
அண்ணலே 6 : 3, 31 : 4
அணங்கினை 43 : 3
அணிந்த 27 : 2
அணியருள் 44 : 2
அணியாய் 44 : 4
அணுகுவார் 28 : 2
அணைத்த 18 : 3

அணைத்தாய் 14 : 3
அணைத்தாள் 15 : 3
அதற்கு 3 : 3
அதனால் 5 : 3, 20 : 2
அந்தமாய் 2 : 2
அப்பா 20 : 1
அப்பரே 36 : 2
அம்பகமே 6 : 4
அம்மகளும் 16 : 3
அம்மையே 2 : 1
அமர்ந்தாய் 2 : 2
அமர 7 : 3
அமலா 1 : 3
அமிழ்த்தி 41 : 2
அமுதத்தால் 36 : 1
அமைச்சே 20 : 1
அமைந்த 10 : 3, 37 : 4
அமைந்ததோ 36 : 1
அமைந்தனை 23 : 3
அமைந்தாய் 2 : 2, 20 : 1, 24 : 3
அமைந்து 10 : 2
அமைப்பாய் 39 : 3, 44 : 3
அயலவர் 24 : 2
அரங்கமா 8 : 1
அரச 47 : 2
அரசர் 38 : 3
அரசனே 5 : 4
அரசே 20 : 1, 24 : 1
அரிசிரா 6 : 3
அரிய 4 : 4
அரிவைமார் 27 : 2
அருகிலே 38 : 1
அருகே 26 : 2
அருச்சிராப்பள்ளி 1 : 3, 5:4

| | |
|---|---|
| அருஞ்சிறப்பு | 10 : 3 |
| அருமைய | 14 : 1 |
| அருள்தி | 25 : 3 |
| அருள்தியோ | 12 : 3 |
| அருள்மொழி | 25 : 2 |
| அருள்வாய் | 41 : 1, |
| | 42 : 3 |
| அருளாய் | 43 : 3 |
| அருளிய | 1 : 3 |
| அருளிலே | 23 : 1 |
| அருளினால் | 10 : 2, |
| | 23 : 3 |
| அருளும் | 30 : 3 |
| அருளே | 12 : 2 |
| அருளை | 39 : 3 |
| அரைப்பசி | 46 : 1 |
| அலத்தகம் | 27 : 2 |
| அலது | 34 : 2 |
| அலவோ | 38 : 4 |
| அலையோ | 5 : 3, |
| | 7 : 4 |
| அவலத்தில் | 47 : 2 |
| அவளே | 9 : 2 |
| அவளும் | 10 : 4 |
| அவர்க்கு | 36 : 4 |
| அவர்க்கென | 32 : 4 |
| அவர்கருத்து | 23 : 3 |
| அவர்தம் | 47 : 3 |
| அவர்தமை | 40 : 3 |
| அவர்தாம் | 27 : 2 |
| அவர்புகழ் | 49 : 3 |
| அவரை | 45 : 4 |
| அவனியில் | 49 : 3 |
| அவாவிய | 24 : 1 |
| அவாவுள | 48 : 1 |
| அவித்தையே | 4 : 1 |
| அழகில் | 9 : 3 |
| அழகினது | 31 : 4 |
| அழகினை | 31 : 4 |
| அழிந்த | 33 : 3 |

அழிந்தார் 23 : 3
அழிவிலாதவனே 6 : 3
அழைத்தேம் 44 : 1
அழைப்பதை 24 : 1
அளவும் 1 : 2
அளவே 6 : 2
அளப்பரும் 23 : 1
அளப்புகுந்து 38 : 2
அளித்தாய் 35 : 2
அளித்தியால் 4 : 3
அளித்தேன் 32 : 4
அளியவர்க்கு 25 : 2
அறங்கெழு 10 : 3
அறந்தெளி 15 : 3
அறாத 7 : 1
அறாப்பெண் 18 : 1
அறிகிலாததுவே 43 : 2
அறிந்த 10 : 3
அறிந்தனர் 21 : 1
அறிந்து 17 : 2
அறிந்தாய் 13 : 3
அறிந்தார் 16 : 4
அறிந்தாள் 15 : 3, 19 : 1
அறிந்திலர் 23 : 3
அறிந்தேன் 22 : 2
அறிய 13 : 1, 24 : 2
அறியார் 45 : 2
அறியாள் 12 : 2, 21 : 4
அறியேம் 36 : 1
அறியேன் 18 : 3, 21 : 4
அறிவாய் 47 : 2
அறிவார் 23 : 2
அறிவிலே 23 : 1
அறிவினால் 25 : 1
அறிவுறுத்தும் 39 : 4
அறிவேம் 42 : 4

| | | | |
|---|---|---|---|
| அன்பருக்கு | 1 : 3 | இசையவே | 9 : 3 |
| அனுதினம் | 28 : 2 | இசைக்கவே | 2 : 1 |
| அனைத்துயிர் | 2 : 2 | இசைத்தனை | 7 : 4 |
| அனைத்தையும் | 33 : 2 | இசைத்தாய் | 32 : 2 |
| ஆடவர் | 27 : 2 | இசைப்பாய் | 41 : 1 |
| ஆண்டவன் | 24 : 1 | இசைப்பின் | 34 : 2 |
| ஆண்டருள் | 33 : 2 | இடைவது | 16 : 2 |
| ஆண்டியே | 43 : 3 | இடைநிலை | 42 : 4 |
| ஆண்டுளார் | 47 : 2 | இணங்கியே | 43 : 2 |
| ஆண்மையை | 14 : 1 | இதனை | 22 : 1 |
| ஆதியாய் | 2 : 2 | இதயமே | 45 : 1 |
| ஆயினும் | 27 : 2 | இதயத்தை | 43 : 2 |
| ஆரண | 7 : 1, | இதுவும் | 19 : 4 |
| | 12 : 3 | இம்மையே | 20 : 3 |
| ஆலயம் | 29 : 3 | இயற்கையை | 41 : 3 |
| ஆவதன் | 11 : 3 | இயன்றதோர் | 30 : 1 |
| ஆளுடை | 36 : 2 | இரக்க | 47 : 3 |
| ஆற்றலால் | 23 : 1 | இரக்கவே | 48 : 3 |
| இக்கணமே | காப்பு | இரங்க | 21 : 3 |
| இகப்பிலேம் | 23 : 4 | இரண்டிலும் | 20 : 3 |

இருக்க 10 : 1
இருக்கும் 5 : 1, 25 : 1
இருந்து 16 : 2, 40 : 1, 48 : 4
இருந்தாய் 2 : 2, 20 : 3, 28 : 1
இருப்பதாய் 15 : 1
இருப்பதை 31 : 1
இருமகள் 9 : 3
இருளில் 47 : 3
இருளிலே 23 : 4
இலத்திலே 16 : 3
இலத்தினை 11 : 3
இலாத 39 : 3
இலாதாய் 48 : 1, 4 : 1, 45 : 4,
50 : 2
இலாதேம் 44 : 2
இலாது 49 : 4
இலேம் 46 : 4, 48 : 3
இலேனை 50 : 1
இலை 44 : 4, 48 : 2
இலையே 31 : 2, 48 : 2
இவ்வணம் 18 : 2
இழந்தே 47 : 2
இழித்து 46 : 3
இறைவ 17 : 1, 43 : 2
இறைவா 4 : 2
இறைவி 29 : 3
இறையே 34 : 4, 41 : 3
இறைவனே 40 : 1

| | | | |
|---|---|---|---|
| இறைமையே | வாழ்த்து | உணர்ச்சியால் | 10 : 4 |
| இனம் | 24 : 4 | உணர்த்துவது | 15 : 3 |
| இனிமை | 7 : 2 | உணர்வாள் | 30 : 2 |
| இனிதருள் | 37 : 2 | உணர்விலா | 45 : 2 |
| இஃதென்று | 19 : 3 | உணரவே | 33 : 3 |
| ஈகையில் | 50 : 1 | உணரும் | 43 : 2 |
| ஈண்டவர் | 49 : 4 | உணவு | 49 : 3 |
| உக்தியில் | 3 : 3 | உதவிகள் | 12 : 2 |
| உச்சி | 25 : 4 | உதவியை | 25 : 1 |
| உச்சிமேல் | 26 : 3, | உதவுதி | 25 : 1, |
| | வாழ்த்து | | 43 : 4 |
| உச்சியின் | 1 : 2 | உபநிடதருத்தம் | 3 : 3 |
| உடைய | 2 : 3, | உய்வணம் | 18 : 4 |
| | 21 : 3, | உயர்ந்தனை | 5 : 3 |
| | 25 : 4, | உயர்ந்தாய் | 23 : 1 |
| | 43 : 4 | உரிய | 14 : 4 |
| உடையாய் | 28 : 1 | உரிதோ | 17 : 3 |
| உடையோர் | 42 : 3 | உரித்தென | 18 : 4 |
| உண்மையினை | 29 : 2 | உருகி | 17 : 2 |
| உணங்குவேம் | 43 : 4 | உருச்சிராப்பள்ளி | 1 : 2, |

| | | | |
|---|---|---|---|
| | 5: 3 | உழலும் | 45 : 2 |
| உருவா | 20 : 2 | உழன்றெம் | 23 : 4 |
| உருவாய் | 1 : 1, | உள்ள | காப்பு |
| | 41 : 2 | உளத்தும் | 3 : 1 |
| உருவே | 4 : 3, | உளத்தார் | 6 : 2, |
| | 13 : 2, | | 30 : 2 |
| | 31 : 4 | உளத்தினேன் | 50 : 3 |
| உரைக்க | 30 : 3 | உளதென | 32 : 2 |
| உரைக்குமுன் | 43 : 4 | உளதே | 22 : 4 |
| உரைத்தவ | 3 : 3 | உளதோ | 22 : 3 |
| உரைத்தே | 18 : 4 | உளதை | 13 : 3 |
| உரைப்பன | 29 : 1 | உளமெலாம் | 17 : 2 |
| உரையாய் | 29 :4 | உறாத | 10 : 4 |
| உலகம் | 33 : 2 | உறுதுணை | 20 : 3 |
| உலகர் | 40 : 3 | உனக்கே | 18 : 4 |
| உலகில் | 48 : 2 | உனையே | 50 : 3 |
| உலகினில் | 22 : 3 | ஊன்றுபோர் | 16 : 2 |
| உலகினிலே | 42 : 2 | எங்ஙனம் | 18 : 1 |
| உவந்தனை | 5 : 3 | எண்ணியாம் | 19 : 3 |
| உவந்து | 35 : 4 | எதிரே | 37 : 3 |

| | | | |
|---|---|---|---|
| எம்இறைவனே | 1 : 1 | எளியையாய் | 18 : 2 |
| எம்பிரான் | 18 : 1 | என்பதை | 4 : 2, |
| எம்பிரானே | 2 : 3 | | 13 : 1 |
| எம்பெருமான் | வாழ்த்து | என்பெயர் | 32 : 4 |
| எம்மனை | வாழ்த்து | என்செய | 49 : 4 |
| எம்மிறை | 32 : 4 | என்வாய் | காப்பு |
| எமக்கு | 39 : 4 | என்றிறும் | 17 : 1 |
| எமக்கும் | 42 : 2 | என்றிரந்தனளால் | 12 : 3 |
| எமையும் | 46 : 3 | என்றனர் | 21 : 4 |
| எரிசிரா | 6 : 4 | என்றுமே | 45 : 1 |
| எவ்வணம் | 18 : 1 | என்னயாம் | 44 : 1 |
| எவருமே | 39 : 4 | எனது | 19 : 3 |
| எழுந்தருள் | 4 : 2 | எனவே | 4 : 3, |
| எழுவதாம் | 50 : 1 | | 9 : 1, |
| எள்ளள | 50 : 1 | | 9 : 2, |
| எள்ளினும் | 23 : 4 | | 9 : 4, |
| எளிதருளியதை | 17 : 4 | | 24 : 1, |
| எளியவென்று | 18 : 2 | | 24: 2, |
| எளியார் | 43 : 2 | | 26 :4, |
| எளியேன் | 18 : 2 | | 29 : 1, |

29 : 1,
30 : 4,
43 : 4
எனலாம் 16 : 4
எனினும் 27 : 2,
50 : 1,
42 : 1
எழினியே 49 : 1
ஏற்ற 34 : 2
ஏற்றனை 6 : 4
ஏறுவகை 35 : 2
ஐயகோ 46 : 1
ஐயமேந்துவதற்கு 48 : 1
ஒட்டி 35 : 4
ஒட்டுவாய் 35 : 4
ஒதுங்கும் 22 : 2
ஒப்பனை 36 : 3
ஒருகை 33 : 2
ஒருவா 43 : 3
ஒருமுடி 26 : 2
ஒருமை 29 : 2
ஒருமையா 26 : 4
ஒழித்து 44 : 3
ஒளியவர்க்கு 25 : 1
ஒளியே 19 : 2
ஒளியை 25 : 1
ஒன்று 26 : 1
ஒன்றுமே 45 : 2
ஓகையில் 50 : 3
ஓங்கலாய் 5 : 3
ஓங்கலும் 16 : 2
ஓங்கிய 1 : 2
ஓரியே 49 : 1
கடக்குமாறு 12 : 2
கடந்த 21 : 2
கடந்தெழும் 19 : 2
கடமை 46 : 4
கடலென 24 : 3
கடலே 47 : 1
கடவுளே 40 : 4,

| | | | |
|---|---|---|---|
| | 46 : 4 | கருணைசால் | 7 : 4 |
| கடுகுதல் | 45 : 3 | கருணையே | 24 : 3, |
| கண்களை | 4 : 3 | | 45 : 3 |
| கண்டுணர் | 4 : 3 | கருணையங் | 47 : 1 |
| கணமகள் | 9 : 4 | கருவினை | 9 : 4 |
| கணவன் | 15 : 2 | கரைபுரள்வதனால் | 11 : 1 |
| கணமே | 24 : 1 | கரையருகா | 8 : 1 |
| கதி | 44 : 2 | கவ்விய | 47 : 3 |
| கதைகளால் | 33 : 3 | கவிதைகள் | 30 : 4 |
| கரிய | 47 : 3 | கழுவுறப்பெறாத | 34 : 1 |
| கரிந்தன | 33 : 3 | கனகமே | 50 : 2 |
| கருத்தெனை | 29 : 3 | காட்சி | 6 : 2 |
| கருதி | 19 : 3 | காண்குநாம் | 4 : 3 |
| கருப்பம் | 12 : 1 | காண்டகு | 24 : 1 |
| கருமம் | 39 : 2 | காதல்சால் | 11 : 1 |
| கருமமே | 40 : 2, | காதல | 9 : 4 |
| | 40 : 4 | காமிய | 39 : 2 |
| கருமயோகிகளென | 40 : 2 | காரணம் | 38 : 4 |
| கருமிகள் | 39 : 2 | காரணன் | 7 : 4, |
| கருமையில் | 28 : 3 | | 12 : 1 |

காரி 49 : 1
காலடி 29 : 2
காலராய் 47 : 3
காவிரி 8 : 1,
11 : 1,
12 : 2,
34 : 1
காவிரியும் 16 : 1
கிட்டுவார் 35 : 2
கிரிசனே 31 : 2
கிரிசையின் 31 : 32
கிரிசையும் 14 : 2
கிழமையை 31 : 2
கிளர்ச்சியை 35 : 2
குடிலிலே 18 : 2
குணத்தாய் 24 : 3
குணத்தினார் 46 : 3
குணம்பொலி 14 : 4
குணமகள் 9 : 2
கும்பிடும் 27 : 4
குருபர 29 : 4
குலத்தகம் 27 : 48
குலத்தே 8 : 2,
8 : 4
குலமெலாம் 13 : 1
குவித்தாள் 19 : 1
குவிந்தால் 30 : 4
குவைகுவை 30 : 4
குழவிகள் 32 : 1
குழவியை 14 : 3
குறிக்கொள 9 : 2
குறிப்பை 11 : 2
குறைவறு 37 : 3
கூரை 13 : 4
கேட்ட 15 : 1,
16 : 3
கேவல 35 : 2
கைதொழும் 28 : 3
கையரே 46 : 4
கொடுக்கும் 34 : 1

கொடுத்தாய் 14 : 4
கோடியோ 30 : 4
கோண்மையை 14 : 2
கோண்மையின் 14 : 4
கோயிலாம் 37 : 3
கோயிலையே 27 : 1
சக்தியில் 3 : 2
சங்கர 42 : 1
சத்தியம் 16 : 4
சத்துவ 39 : 1
சதாசிவமே 42: 1
சந்தமா 2 : 1
சம்பு 42 : 1
சம்புவே 12 : 4
சமாதி 38 : 3
சராசரங்களையும் 33 : 1
சரிதையுள் 22 : 1
சரிந்தன 33 : 1
சாகையில் 50 : 4
சாமியம் 39 : 1
சாமியே 38 : 4
சான்ற 40 : 3
சான்றுதான் 16 : 3
சிதைத்து 40 : 1
சிந்தனை 15 : 2
சிரத்திலே 35 : 4
சிராப்பள்ளி 34 : 4
சிரித்தாய் 23 : 3
சிலபகல் 22 : 3
சிவனே 1 : 1
சிவமே 6 : 1
சிவனையே 22 : 3
சிவபுரம் 22 : 4
சிவமய 22 : 1
சிவமுளாய் 22 : 4
சிவைதிரு 30 : 3
சிறந்த 3 : 1, 3 : 2, 3: 3, 23 : 2,

| | | | |
|---|---|---|---|
| | 31 :1, | செய்தி | 15 : 2 |
| | வாழ்த்து | செயல்பல | 24 : 2 |
| சிறந்தனை | 20 : 2 | செயலினை | 17 : 2 |
| சிறந்ததன் | 15 : 2 | செல்வமாய் | 25 : 3 |
| சிறந்தவர் | 25 : 2 | செலுத்தும் | வாழ்த்து |
| சிறந்தான் | 9 : 1 | செவ்வெண்ணெய் | 14 : 4 |
| சிறந்தாய் | 23 : 1, | செவியாய் | 7 : 2 |
| | 28 : 2 | செறிந்ததென்று | 30 : 3 |
| சிறப்பார் | வாழ்த்து | சேய்மையே | 44 : 4 |
| சிறப்பை | 37 : 4, | சேர்த்தனை | 8 : 4 |
| | 44 : 1 | சைவ | 37 : 1 |
| சிறியரேம் | 42 : 1 | சொற்றனை | 16 : 3 |
| சுமந்தாள் | 9 : 4 | ஞானமே | 41 : 2 |
| சுயம்புவே | 30 : 1 | ஞானவாரிதியிலே | 41 : 2 |
| சுவைமிகு | 30 : 1 | தகவை | 38 : 4 |
| செட்டிமார் | 8 : 4 | தகுதியே | 42 : 1 |
| செம்மையில் | 28 : 3 | தகுதிரிசிரா | 19 : 1 |
| செம்மையே | 20 : 2 | தகுந்தவர் | 2 : 1 |
| செய்தனரே | 20 : 2, | தகுவதே | 19 : 4 |
| | 38 : 3 | தகைதெளி | 21 : 1 |

| | |
|---|---|
| தங்கையே | 2 : 4 |
| தத்துவ | 39 : 1 |
| தத்துவம் | 37 : 1 |
| தந்தருள் | 50 : 4, 6 : 2 |
| தந்தையே | 2 : 4, 44 : 1 |
| தமக்கே | 25 : 2 |
| தமக்கை | 2 : 4 |
| தமது | 21 : 1 |
| தமிழ்தெளி | 38 : 3 |
| தமிழ்மொழி | 49 : 2 |
| தமிழநன் | 2 : 1 |
| தமிழால் | 30 : 1, 32 : 3 |
| தமிழிசையில் | 7 : 1 |
| தமையனே | 2 : 4 |
| தயைமிகு | 1 : 4 |
| தயையும் | 28 : 4 |
| தரணி | 41 : 4 |
| தரிசனம் | 1 : 4 |
| தரிசிரா | 6 : 2 |
| தரித்தாய் | 14 : 1 |
| தருச்சிராப்பள்ளி | 1 : 4, 5 : 1, 10 : 2 |
| தருதல்நின் | 42 : 2 |
| தரும | 28 : 4 |
| தருமமே | 40 : 3 |
| தருவாய் | 1 : 4 |
| தலைகரம் | 19 : 1 |
| தலைவ | 3 : 2, 31 : 2, 33 : 2 |
| தலைவன் | 9 : 3 |
| தலைவிபால் | 10 : 3 |
| தவமே | 41 : 4 |
| தழுவிடு | 5 : 2 |
| தழைப்புறவே | 41 : 4 |
| தன்பெயர் | 32 : 2 |
| தனிநிலை | 19 : 1 |

தனைகரம் 3 : 2

தாங்கினை 33 : 1, 41 : 4

தாங்குதி 28 : 4

தாய்புகல் 21 : 1

தாய்மை 15 : 4

தாய்மையின் 44 : 1

தாய்திரு 13 : 2, 19 : 4

தாயான காப்பு

தாயிஃது 19 : 2

தாயுமான வாழ்த்து

தாயுமானவன் 13 : 1

தாயுமானவனே 1 – 50 : 4

தாயுமானவர்க்கு 37 : 1

தாயுமானவரை 32 : 2

தாயென 14 : 2, 46 : 2

தாயே 2 : 4, 15 : 3

தாயொடு 13 : 1

தானமே 41 : 4

திகழும் 1 : 1

திடப்பால் 30 : 2

திரிசிரபுரத்தாய் 4 : 4

திரிசிரபுரத்து 22 : 1, 22 : 3, 22 : 4

திரிசிரபுரத்தே 8 : 3, 22 : 3

திரிசிரா 6 : 1, 26 : 1, 34 : 3

திரிபுரர் 23 : 2

திரிபுரங்களையே 33 : 2

திரியும் 41 : 3

திரு 44 : 2

திருச்சிராப்பள்ளி 1 : 1

திருத்தளி வாழ்த்து

திருத்தாய் 12 : 2

| | | | |
|---|---|---|---|
| திருத்தொண்டர் | 6 : 1 | துதியினை | 29 : 3 |
| திருநீறு | 35 : 4 | தூய்திலாதவரும் | 45 : 1 |
| திருப்பதத்தாய் | 7 : 2 | தூவிரி | 8 : 3 |
| திருமகள் | 11 : 3 | தெய்வமே | 5 : 1, |
| திருமதில் | 27 : 4 | | 33 : 4 |
| திருமடம் | 37 : 2 | தெய்வநாயகனே | 5 : 1 |
| திருமலை | 1 : 1 | தெய்வம்வேறு | 22 : 3 |
| திருவடி | 11 : 3 | தெரிக்கும் | 33 : 4 |
| திருவருள் | 37 : 4 | தெரிந்தன | 33 : 4 |
| திருவினை | 22 : 2 | தெரிந்திலள் | 15 : 4 |
| திறந்தெளி | 15 : 4 | தெரிவுற | 33 : 4 |
| திறமெமக்கு | 31 : 2 | தெளித்தருள் | 34 : 4 |
| தீண்டுதல் | 4 : 4 | தெளிவுற | 20 : 2 |
| துணிந்த | 39 : 2 | தெளிவுறற்குரிய | 25 : 3 |
| துணிந்தேன் | 50 : 3 | தெளிவையே | 25 : 3 |
| துணையென | 14 : 2, | தேவனே | 4 : 4 |
| | 21 : 3, | தேவர்தம் | 11 : 3 |
| | 43 : 3 | தேவிரி | 8 : 4, |
| துணையே | 19 : 2 | | 34 : 4 |
| துணையொடு | 13 : 2 | தொன்மைசால் | 8 : 3 |

தோய்மனம் 21 : 3

தோயுமா 37 : 2

தோற்றமே 29 : 1

தோன்றுதாய் 16 : 3

நகருக்கு 38 : 1

நடக்கவும் 17 : 3

நடந்தாய் 13 : 2

நடந்துறு 30 : 2

நயந்தனை 13 : 2

நலத்தையும் 35 : 2

நலமுற 30 : 2

நவையிலா 30 : 2

நள்ளியே 49 : 1

நற்சிறு 14 : 3

நன்கறி 44 : 1

நன்கருளி 44 : 3

நன்நிலைமை 48 : 1

நன்றென 34 : 2

நன்னெறியின் 37 : 1

நாண்மையின் 14 : 3

நாயகனே 34 : 2

நாயமா 13 : 2

நாரணன் 7 : 3

நாவிரி 34 : 2

நான்முகன் 7 : 3

நிகர் 7 : 1

நிகர்க்கும் 22 : 3

நிட்காமியத்து 39 : 3

நிலத்தக 27 : 1

நிலத்திலே 32 : 1

நிலமெலாம் வாழ்த்து

நிலைமை 43 : 1

நிலையை 34 : 4

நிற்கியல்பே 28 : 4

நிற்குரிதே 28 : 4

நிறைக்கும் 47 : 1

நிறைவருள் வாழ்த்து

நின் 26 : 1, 42 : 11, 44 : 1

| | | | |
|---|---|---|---|
| நின்கடமை | 46 : 4 | | 43 : 1 |
| நின்பெயர் | 32 : 1 | | 45 : 1 |
| நின்னையே | 48 : 4 | நினைப்பம் | 20 : 4 |
| நினக்குரியதென | 30 : 1 | நினைப்பாள் | 18 : 1 |
| நினக்கு | 32 : 2 | நீ | 32 : 2 |
| நினதருள் | 20 : 4 | | 38 : 4 |
| | 37 : 2 | | 43 : 2 |
| நினது | 17 : 2 | நுவலவும் | 13 : 3 |
| | 36 : 1 | நூறுகால் | 37 : 3 |
| | 27 : 1 | நெடிதுயர் | 26 : 3 |
| | 37 : 2 | நெறியாய் | 13 : 2 |
| | 27 : 3 | நெறியின் | 30 : 2 |
| | 42 : 2 | நெறியும் | 39 : 4 |
| நினாது | 38 : 1 | நெறியே | 30 : 3 |
| நினைந்திலாதவரும் | 45 : 1 | நேயமே | 26 : 3 |
| நினைந்து | 46 : 2 | நேருற | 27 : 1 |
| நினைந்தே | 11 : 3 | நோக்கியே | 27 : 1 |
| | 15 : 1 | நோய்மையே | 44 : 3 |
| நினையே | 15 : 4 | நோயுமாய் | 13 : 3 |
| | 46 : 2 | நோன்புகள் | 44 : 3 |

| | |
|---|---|
| நோன்மை | 44 : 3 |
| பக்தியில் | 3 : 1 |
| பகர்தியோ | 26 : 4 |
| பகுதியே | 42 : 4 |
| பகையையே | 40 : 1 |
| பசிப்பிணி | 46 : 2 |
| பசுவை | 45 : 3 |
| பட்டர்கள் | 35 : 3 |
| பட்டுதூள் | 35 : 3 |
| படிகளை | 31 : 1 |
| படிமங்கள் | 31 : 1 |
| படியில் | 35 : 3 |
| படியிலே | 26 : 4, 31 : 1 |
| படுத்தி | 35 : 3 |
| படைப்பிலே | 7 : 3 |
| பணி | 7 : 2 |
| பணியும் | 26 : 2 |
| பணியையே | 7 : 3 |
| பதவியை | 47 : 2 |
| பதித்தருள் | 3 : 1 |
| பதிந்த | 36 : 3 |
| பயிலே | 7 : 3 |
| பரனே | 3 : 1 |
| பரம்பொருள் | 21 : 2 |
| பரம்பொருளே | 6 : 2 |
| பரமா | 25 : 1 |
| பரிபட்டம் | 35 : 3 |
| பரனே | 28 : 2 |
| பலவும் | 31 : 1 |
| பலவே | 32 : 1 |
| பவந்தம் | 30 : 1 |
| பழமையில் | 31 : 1 |
| பனுவல் | 34 : 2 |
| பாடுதல் | 50 : 3 |
| பாண்டவர் | 49 : 3 |
| பாதமே | 3 : 1 |
| பார்த்தருள் | 42 : 4 |
| பாரி | 49 : 1 |
| பிஞ்ஞகன் | 10 : 2 |
| பிடித்தருள் | 3 : 2 |
| பிடித்தாய் | 20 : 2 |

| | | | |
|---|---|---|---|
| பிரியா | 3 : 4 | புகலும் | 31 : 2 |
| பிள்ளை | காப்பு | | 48 : 2 |
| | 26 : 3 | | 49 : 2 |
| | வாழ்த்து | புகலுதி | 47 : 4 |
| பிள்ளையும் | 36 : 2 | புகழ் | 49 : 2 |
| | வாழ்த்து | புகழ்ந்து | 36 : 2 |
| பிள்ளையை | 25 : 4 | புகழ்ந்தார் | 36 : 2 |
| பிள்ளைதுணை | காப்பு | | 36 : 3 |
| பிறங்கிய | 10 : 2 | புகழ்வேம் | 48 : 4 |
| பிறங்குது | 10 : 1 | புகழ | 20 : 4 |
| பிறந்த | 15 : 1 | புகழவும் | 18 : 4 |
| பிறந்தவோர் | 8 : 3 | புகன்று | 48 : 3 |
| பிறந்தகம் | 10 : 1 | புகுதியே | 42 : 2 |
| பிறந்தன | 32 : 1 | புகுந்தளித்தனை | 16 : 3 |
| பிறந்தாய் | 29 : 2 | புகுந்தாய் | 13 : 4 |
| பிறபொருள் | 29 : 1 | | 14 : 2 |
| பிறரால் | 38 : 1 | | 18 : 2 |
| பிறரும் | 45 : 2 | புகுந்து | 39 : 2 |
| புக்ககம் | 10 : 1 | புகுந்தேக | 17 : 5 |
| புகல்வன் | 12 : 4 | புங்கவர் | 7 : 2 |

| | |
|---|---|
| புதுமையில் | 47 : 4 |
| புரக்கும் | 7 : 3 |
| புராணத்தில் | 22 : 1 |
| புராந்தக | 24 : 4 |
| புராரியே | 42 : 2 |
| புரிந்தனன் | 6 : 3 |
| புரிந்தது | 12 : 4 |
| புரிந்தாய் | 24 : 2, 40 : 4, 33 : 3 |
| புரிந்திடும் | 4 : 2 |
| புரிய | 12 : 1 |
| புரியவே | 44 : 3 |
| புரிவதே | 39 : 4 |
| புரிவேன் | 12 : 3 |
| புலவரே | 34 : 2 |
| புலவராய் | 48 : 3 |
| புலைமை | 46 : 3 |
| புறங்கிளர் | 10 : 4 |
| புறத்திலே | 34 : 3 |
| புறத்தும் | 1 : 3 |
| புறத்தே | 8 : 1 |
| புறப்பொருள் | 23 : 2 |
| புனலினால் | 34 : 1 |
| புனைந்தனை | 19 : 4 |
| புனைய | 35 : 3 |
| பூண்டவன் | 24 : 4 |
| பூண்டுளார் | 47 : 4 |
| பூரண | 7 : 2, 12 : 1 |
| பூவிரி | 8 : 2, 34 : 3 |
| பெண்ணினுக்கு | 21 : 3 |
| பெண்மகளும் | 15 : 1 |
| பெண்மையே | 14 : 1 |
| பெண்மையை | 18 : 3 |
| பெரிய | 28 : 1 |
| பெரியாய் | 28 : 3, 18 : 2 |
| பெரியான் | 28 : 3, |

| | | | |
|---|---|---|---|
| | 28 : 3 | பொதிந்த | 29 : 4 |
| பெரியோர் | 32 : 3 | பொய் | 48 : 3 |
| பெருக்கு | 11 : 4 | பொய்யரேம் | 48 : 3 |
| பெருகி | 11 : 1, | பொரவே | 45 : 3 |
| | 16 : 1 | பொருத்தமாம் | 12 : 1 |
| பெருந்திருமேனி | 36: 1 | பொருத்தி | 31 : 3 |
| பெரும | 23 : 1, | பொருந்தா | 40 : 4 |
| | 33 : 2, | பொருந்திய | 7 : 2, |
| | 44 : 1 | | 12 : 1, |
| பெருமலை | 28 : 1 | | 34 : 3 |
| பெருமான் | 11 : 3 | பொருந்து | 32 : 1, |
| பெருமையில் | 28 : 1 | | 37 : 3 |
| பெற்றதாய் | 15 : 1, | பொருள்மலி | 8 : 2 |
| | 17 : 1 | பொருள்களை | 25 : 3 |
| பெறாத | 34 : 1 | பொருளிலே | 23 : 2 |
| பெறுதலால் | 22 : 2 | பொருளே | 29 : 1 |
| பேருரு | 28 : 1 | பொருளோ | 17 : 3 |
| பேருருவாய் | 34 : 1 | பொழில் சூழ் | 18 : 2 |
| பேருருவை | 27 : 3 | பொழிலே | 34 : 3 |
| பேறழுகை | 15 : 1 | பொறுத்தமா | 38 : 1 |

பொறுத்தனள் 10 : 4
பொறுப்பாம் 42 : 2
பொன்னி 10 : 1
பொன்றுமாறு 45 : 4
போக்கோ 47 : 4
போயினதே 49 : 4
போலவே 16 : 2, 36 : 4
போற்றுதி 45 : 4
மகட்கு 12 : 1
மகப்பேறு 11 : 1, 17 : 1
மகப்பிறவியினை 17 : 4
மகவாய் 8 : 3
மகவை 12 : 2
மகளின் 14 : 3, 21 : 1, 16 : 3
மகளும் 17 : 1
மகளுக்கு 11 : 1
மகளை 8 : 3
மகாலிங்க 1 : 2
மகிழ்ந்த 32 : 2
மகிழ்ந்தனள் 17 : 1
மகிழ்ந்தாள் 10 : 3
மகிழ்வுறும் 15 : 2
மட்டுவார்குழலி 3 : 2, 5 : 2, 26: 2, 29 : 3, 35 : 1 வாழ்த்து
மண்டபத்தின் 37 : 3
மணந்தனள் 5 : 2
மணமகள் 9 : 1
மணாளன் 9 : 1, 10 : 3
மணியோ 50 : 1
மதலையை 15 : 3
மதிக்க 40 : 3
மதிகதிர் 6 : 4

| | | | |
|---|---|---|---|
| மதித்தாய் | 32 : 2 | மலையே | 6 : 1 |
| மதித்து | 38 : 3 | மலையையே | 19 : 1 |
| மதித்துணர் | 2 : 3 | மலைவளர் | வாழ்த்து |
| மதியர் | 2 : 3 | மவுனி | 37 : 1 |
| மதிப்பரும் | 17 : 4 | மறவன் | 16 : 2 |
| மதியாது | 41 : 3 | மறுமை | 20 : 3 |
| மந்தமா | 2 : 3 | மறைக்குமேல் | 19 : 2 |
| மயமே | 1 : 2, | மறைத்தாய் | 14 : 1 |
| | 39 : 1 | மறைத்தே | 18 : 3 |
| மரபு | 49 : 4 | மறைந்தாய் | 35 : 1 |
| மருச்சிராப்பள்ளி | 5 : 2 | மறைபுகழ் | வாழ்த்து |
| மருந்துகளுடனே | 11 : 2 | மறையவே | 35 : 1 |
| மருந்துமாய் | 13 : 3 | மறையும் | 2 : 1, |
| மருந்தே | 46 : 2 | | 2 : 1 |
| மலைக்குமேல் | 18 : 1 | மறையுரு | 2 : 3 |
| மலைபோல் | 40 : 2 | மறையே | 19 : 2 |
| மலைமுடி | வாழ்த்து | மறையோய் | 5 : 2 |
| மலைமேல் | 6 : 1 | மனத்தால் | 37 : 2 |
| மலையின்மேல் | 5 : 1 | மனத்தார் | 48 : 1 |
| மலையுச்சி | காப்பு | மனத்திலும் | 9 : 1 |

| | | | |
|---|---|---|---|
| மனத்தினை | 19 : 2 | மிகுதியே | 42 : 3 |
| மனத்திலே | 35 : 1, | மிகுந்த | 14 : 3 |
| | 39 : 2 | முக்கணனை | காப்பு |
| மனத்தினுக்கு | 9 : 3 | முக்குடுமி | காப்பு |
| மனத்து | 8 : 4 | முக்தி | 41 : 1 |
| மனத்துறைபவனே | 3 : 3 | முக்தியில் | 3 : 4 |
| மனத்தொளி | 6 : 1 | முகவயின் | வாழ்த்து |
| மனமுருகினரே | 36 : 2 | முகவைமா | 38 : 1 |
| மனமுள | 43 : 1 | முடியாம் | 26 : 3 |
| மனமே | 50: 1 | முடியின் | 28 : 1 |
| மாண்டனர் | 49 : 2 | முடியே | 26 : 1, |
| மாநகராம் | 7 : 1 | | 26 : 3 |
| மாமன்மாமியரே | 9 : 2, | முடியொரு | 26 : 1 |
| | 15 : 2, | முதல்வன் | 12 : 4 |
| | 21 : 1 | முதல்வனே | 13 : 4 |
| மாமுனிவரர் | 41 : 1 | முதலே | 12 : 3 |
| மாளிகை | 8 : 2 | முதலோர் | 49 : 1 |
| மானிடரும் | 40 : 2 | முதியமலை | காப்பு |
| மிகப்பெறு | 17 : 2 | முதிர்பெருக்கு | 16 : 1 |
| மிகவுமே | 38 : 3 | மும்மை | 26 : 4 |

| | | | |
|---|---|---|---|
| முழக்கம் | 7 : 1 | மேதக | 42 : 3 |
| முழுப்பசி | 46 : 1 | மேல் | 28 : 1 |
| முழுப்பெயர் | 38 : 1 | மேலவே | 11 : 4 |
| முழுப்பொருள் | 41 : 1 | மேலிருக்கும் | காப்பு |
| முளைத்தன | 26 : 1 | மொழியை | 21 : 1 |
| முறைமையே | வாழ்த்து | மோனமே | 41 : 1 |
| முனமே | 44 : 2 | யாண்டுளார் | 4 : 2 |
| முனிவர் | 38 : 1, | யாண்டையர் | 49 : 2 |
| | 49 : 3 | யாதுயான் | 13 : 3 |
| மூடியவர் | 4 : 3 | யாமியல் | 39 : 4 |
| மூர்த்தியினை | காப்பு | யாய்புகழ் | 21 : 4 |
| மூழ்குவது | 47 : 2 | யான் | 13 : 1 |
| மூன்று | 26 : 1 | யான்புகழ் | 21 : 4 |
| மூன்று நாள் | 16 : 1 | யானமே | 41 : 3 |
| மெல்லிய | 17 : 2 | வகுத்தது | 36 : 4 |
| மெலவே | 11 : 2 | வடக்கே | 8 : 1 |
| மெலிந்தனள் | 11 : 4 | வடகரை | 10 : 1, |
| மெய்ம்மையே | 20 : 4 | | 16 : 2 |
| மெய்வணம் | 18 : 3 | வணங்கவோர் | 27 : 3 |
| மெய்யனே | 46 : 2 | வணங்கி | 19 : 1 |

| | | | |
|---|---|---|---|
| வணங்கியே | 43 : 1 | வழங்கவே | 50 : 2 |
| வணங்கும் | 6 : 3 | வழங்குக | 36 : 4 |
| வணமகள் | 9 : 3 | வழங்குவித்தவை | 39 : 3 |
| வணிக | 13 : 1 | வழவழப்புறவே | 31 : 3 |
| வணிகமா | 14 : 1 | வழிவகுத்தனையே | 27 : 3 |
| வணிகர்தம் | 8 : 2 | வழிவிடாதிருந்த | 16 : 1 |
| வந்தநாள் | 48 : 2 | வழிவிடாததனால் | 11 : 4 |
| வயிந்து | 39 : 3 | வழியிலை | 50 : 2 |
| வரவால் | 17 : 1 | வழுத்த | வாழ்த்து |
| வரமே | 50 : 4 | வழுத்தும் | 43 : 1 |
| வருகிற | 31 : 3 | வள்ளலே | 25 : 4 |
| வருகுவேன் | 44 : 2 | வள்ளவே | 29 : 3 |
| வருந்தி | 46 : 1 | வள்ளுவர் | 48 : 2 |
| வருமமே | 40 : 1 | வளர்த்த | 40 : 2 |
| வருமவள் | 9 : 1 | வளர்த்து | 35 : 2, |
| வருவர் | 45 : 3 | | 40 : 1 |
| வருவார் | 27 : 1 | வளர்ந்த | 32 : 1 |
| வருவோர் | 27 : 4 | வளர்ந்தனள் | 9 : 2 |
| வல்விகம் | 21 : 2 | வளர்ந்தாய் | 35 : 1 |
| வலத்தகம் | 27 : 3 | வளர | 10 : 2 |

| | | | |
|---|---|---|---|
| வளரும் | 50 : 2 | வாழ்க | வாழ்த்து |
| வளியுளர் | 25 : 4 | வாழ்க | வாழ்த்து |
| வளைந்து | 27 : 3 | வாழ்க | வாழ்த்து |
| வளைந்தே | 27 : 4 | வாழியவே | வாழ்த்து |
| வறுமை | 46 : 1 | வானமே | 35 : 1 |
| வனத்தே | 49 : 3 | விகுதி | 42 : 4 |
| வாகையில் | 50 : 2 | விடுதியோ | 45 : 4 |
| வாமியின் | 39 : 3 | வித்தையே | 4 : 1 |
| வாய்பெரும் | 19 : 2 | விரலினால் | 33 : 2 |
| வாய்மையே | 44 : 2 | விரித்தாய் | 23 : 2 |
| வாயவே | காப்பு | விரிந்தன | 33 : 2 |
| வாயில்வாழ் | காப்பு | விருப்பெலாம் | 47 : 1 |
| வாயுமாறு | 37 : 4 | விரும்பும் | 42 : 3 |
| வாழ்த்தியே * * * | 43 : 1 | விரும்புவதே | 24 : 4 |
| வாழ்த்துக | காப்பு | விரைந்தனை | 13 : 4 |
| வாழ்கையில் | 49 : 3 | விரைவுற | 42 : 3 |
| வாழ்வுறும் | 50 : 1 | விலங்குபோல் | 45 : 2 |
| வாழ்பவர் | 40 : 1 | விழுந்த | 33 : 1 |
| வாழ்வினை | 40 : 1, | விழுந்து | 27 : 1 |
| | 49 : 2 | விழைவரோ | 20 : 4 |
| வாழ்ந்தவ | 32 : 3 | விழையேம் | 48 : 3 |

| | | | |
|---|---|---|---|
| விள்ளவே | 29 : 2 | வீட்டுளே | 13 : 4 |
| விளக்க | 23 : 3 | வெண்மையில் | 28 : 3 |
| | 24 : 3 | வெய்யரே | 46 : 3 |
| | 32 : 3 | வெளியவர் | 43 : 1 |
| விளக்கவோர் | 21 : 2 | வெறுத்தனர் | 46 : 3 |
| விளக்கி | 25 : 4 | வெறுப்பது | 4 : 1 |
| | 40; 3 | வேடம் | 19 : 4 |
| | 41 : 1 | | 47 : 4 |
| விளக்கினை | 29 : 2 | வேடத்தை | 18 : 3 |
| விளக்கிய | 15 : 4 | வேண்டினர் | 5 : 3 |
| | 26 : 3 | வேண்டினேம் | 46 : 2 |
| | 37 : 1 | வேண்டியே | 25 : 1 |
| விளக்கினர் | 32 : 1 | வேண்டுவ | 42 : 3 |
| விளக்கும் | 14 : 2 | வேண்டுவார் | 47 : 1 |
| | 31 : 1 | வேண்டும் | 47 : 1 |
| | 37 : 2 | வேண்டுவது | 4 : 1 |
| விளக்கே | 18 : 1 | வேயுமா | 13 : 4 |
| விளங்கிய | 6 : 1 | வைப்பினை | 36 : 4 |
| | 34 : 3 | வையமே | 48 : 2 |
| விளிப்பாய் | 31 : 3 | | |

♦♦♦

# துணை நூல்கள்

1. இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம்

மது.ச. விமலானந்தம்

2. கம்பன் பிள்ளைத்தமிழ்

நா. கனகராச ஐயர்

3. கலைக்களஞ்சியம்

தொகுதி – 2

4. காசி விசுவநாத சதகம்

நா. கனகராச ஐயர்

5. தமிழ் இலக்கிய வகையும் வடிவும்

ச.வே. சுப்பிரமணியன்